வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4148/அ2/2023 நாள் 04.10.2023

பொருள் பள்ளிக் கல்வி – கடன்களும் முன்பணமும் – அரசுப் பணியாளரின் குழந்தைகளுடைய கல்விக்கான முன்பணம் வழங்க – நிதி ஒதுக்கீடு பெற்று வழங்க தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் பரிந்துரை செய்து அனுப்பக் கோருதல் - தொடர்பாக

பார்வை

1. அரசாணை நிலை எண் 443 நிதி ( கொள்முதல் துறை நாள் 15.07.1962.
2. அரசாணை நிலை எண் 271 நிதி ( கொள்முதல் துறை நாள் 24..08.2023.
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்கக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 059888/எச்/இ1/2023 நாள் 27.09.2023

பார்வை 2-ல் காணும் அரசாணையில், அரசு பணியாளர்களின் குழந்தைகளுடைய கல்விக்கான முன்பணம் அனுமதித்து ஆணை பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 1- ல் காணும் அரசாணையின் படியும் , பார்வை 3ல் காணும் செயல்முறைகளின் படியும் , தங்கள் பள்ளி / அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு விருப்பமுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து கல்வி முன்பணம் சார்ந்த விண்ணப்பப் படிவம் எவ்வித கலங்களும் விடுபடாமல் தகுதிவாய்ந்த விண்ணப்பங்களை சரிபார்த்து தொகுத்து அலுவலர் / தலைமைஆசிரியரின் பரிந்துரையுடன் 30.10.2023 ற்குள் அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் விண்ணப்பங்களின் அடிப்படையில் நிதி அரசிடமிருந்து கோரி பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் உரிய தேதிக்குள் விண்ணப்பங்கள் அனுப்பி வைத்திட நடவடிக்கை மேற்கொள்ள மீள தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் தேதிக்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்க இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு –**

1. பார்வை 2 ல் காண் அரசாணை நகல்
2. படிவம்

//ஒப்பம் //

// செ. மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   இடைநிலை / தொடக்க கல்வி / தனியார் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.
2. தலைமைஆசிரியர்கள்
   அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.